**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை23 ஜுன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 22 ஜுலை 2020 ஆந் திகதியும்சபையின் தவிசாளருக்குஅனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின்நிதிக்கூற்றுக்களில்2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சபையின் 05 வகையான சொத்துக்கள் சபையில் பௌதிகரீதியாக இல்லாதபோதும் வருட இறுதியில் சொத்துக்களின் பெறுமதியினுள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் 31 திசெம்பர் 2019 இல் உள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,794,960 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியில் காணப்படும் சொத்துக்கள் மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும் | பதிவழித்தல் அனுமதியின் பொருட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 177,314,653 பெறுமதியான 05 கணக்குகளுக்கான காணி உரிமைப்பத்திரம், நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் நிலையான வைப்புச்சான்றிதழ் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காணி ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துஎனினும் எந்தவொரு ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன்இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவு | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | அதிகாரச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும். | இனிவரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 371(5) | கூட்டுமொத்தம் ரூபா 200,815 பெறுமதியான 06 முற்பணம் தொடர்பில் கடந்த இரு வருடங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களுக்கமைய செயற்படல் வேண்டும் | முற்பணக்கணக்கில்ரூபா 22,277 தொகைக்கு பதிவழிப்பிற்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனையவை நிலஅளவைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தொகையாகும். முற்பணத்தினைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி உரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 571 | கூட்டுமொத்தம் ரூபா 214,455 பெறுமதியான 08 காலம் கடந்த வைப்புகள் தொடர்பில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களுக்கமைய செயற்படல் வேண்டும் | கோரிக்கை சமர்ப்பிக்கப்படாததனால் மீளளிப்புச் செய்யப்படவில்லை. தற்பொழுது நிதிப்பிரமாணத்திற்கமைவாக உரியவர்களுக்கு அறிவித்து வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல் | | | |
| | (i) பிரிவு 178 (3) | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக்கமைய செயற்படல் வேண்டும் | பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஈ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | சபையின் அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் | சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்காக தனித்தனி கோவைகள் பொதுவான கோவைகள் என்பன பேணப்பட்டு வருகின்றன |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,966,862 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,392,468 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பட்டியலிடப்பட்ட வருமானம்,சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 3,500,000 | 3,274,905 | 3,692,170 | 3,136,672 | 3,500,000 | 32,749,905 | 3,499,360 | 1,883,898 |
| வாடகைகள் | 2,964,300 | 2,964,300 | 2,241,737 | 90,266 | 3,007,300 | 3,007,300 | 23,066,125 | 10,103 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,260,000 | 2,260,000 | 2,425,583 | 000 | 2,160,000 | 2,160,000 | 2,305,730 | - |
| ஏனைய வருமானம் | 65,310,600 | 65,310,600 | 76,446,076 | 49,499,485 | 62,913,716 | 62,913,716 | 45,192,887 | 20,944,685 |
| **மொத்தம்** | **74,034,900** | **73,809,805** | **84,805,566** | **52,726,423** | **71,581,016** | **100,830,921** | **74,064,102** | **22,838,686** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மையான வருமானத்திற்கும் இடையே ரூபா 145,730 தொடக்கம் ரூபா 3,111,802 வரையான வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது | பாதீடுசரியான முறையில் தயாரிக்கப்படல்வேண்டும். | இனிவரும் காலத்தில் பாதீடுதயாரிக்கும் போது இவ்வாறானவேறுபாடுகள் ஏற்படாது தயாரிக்கப்படவுள்ளது |
| (ஆ) | கடந்த 29 ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் பெறப்படவேண்டிய ஆயுள்வேத நன்கொடையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவரும் ரூபா 38,280 தொடர்பில் அதற்குரிய காரணங்கள் கணக்காய்வுக்கு உரியவாறு கிடைத்திருக்கவில்லையாதலால் அதனை திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது | நிலுவைகளினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | பதிவழித்தல் அனுமதியின் பொருட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது |

### 2.2.3 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 2,235,999 இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் 08 வருடங்களுக்கு மேலாக ஆதன வரி மீள்மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையாதலால் ஆதன வரி வீதங்களின் அறவீடு மற்றும் நிலுவைகளின் சரியான தன்மையினைத் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியவில்லை | நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு மீள்மதிப்பீடு செய்துதருமாறுகோரி பலமுறை கடிதம் அனுப்பியிருந்தும் மீள் மதிப்பீடு செய்துதரப்படவில்லை. அத்துடன் ஆதன உரிமையாளர்கள் குறித்த குடியிருப்புக்களில் தற்சமயம் இல்லாத காரணத்தினாலும் நிலுவைகளை அறவிட முடியாதுள்ளது. இருந்தும் நடுக்கட்டல் உத்தியோகத்தர் மூலம் குறித்த ஆண்டில் நிலுவைகள் அறவிடப்பட்டுள்ளன |

### 2.2.4 ஏனையவருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ஜே.சி.பி, மோட்டார் கிரேடர் மற்றும் மோட்டார் றோலர் என்பவற்றினை வாடகைக்கு கொடுத்தமை தொடர்பில் 27 அறவிடப்பட வேண்டியிருந்த வருமான நிலுவை ரூபா 504,252 இனை கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | வருமான நிலுவைகளை அறவீடு செய்வதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான ஜேசிபி, மோட்டார் கிரேடர், மற்றும் றோட் றோலர் ஆகியவற்றினை கம்பெரலியா வேலைத்திட்டத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தது. தற்பொழுது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வாகன வாடகையில் 90%ற்குமேல் அறவிடப்பட்டுள்ளன |

## 2.2.5 நீதிமன்றதண்டப்பணம் மற்றும்முத்திரைக் கட்டணங்கள்

### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,295,513 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | குறித்த ஆண்டிற்கான நீதிமன்றத்தண்டப்பணம் அடுத்த ஆண்டுகளிலேயே கிடைக்கப்பெறுவது வழமையானதாகும். |

### (ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,706,476 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில முத்திரை கட்டண நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | குறித்த ஆண்டிற்கான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் அடுத்த ஆண்டுகளிலேயேகிடைக் கப்பெறுவது வழமையானதாகும் |

## 3. செயற்பாட்டுமீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், சுகாதாரம்,பொதுப்பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையிளால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் 19 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | 19 உபவிதிகள் கணக்காய்விற்கு பொருத்தமாக உள்ளதால் அவை மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,952,000பெறுமதியான 09 செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் காணப்பட்டன. | உரிய காலத்தில் செயற்பாடுகள் முடிவுறுத்தப்படல் வேண்டும் | குறித்த திகதியில் கொடுப்பனவுக்குரிய நிதி கிடைக்கப் பெற்றிருக்க வில்லை.தற்பொழுது கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது |

**(இ) திண்மக்கழிவுமுகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். | காணி விடுகைக்கான அனுமதி கிடைக்காத காரணத்தினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படமுடியாமலுள்ளது. உரிமை கையளிக்கப்படுமாயின் முறைமையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை | சுகாதார தொழிலாளர்களை வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடந்த காலத்தில் ஒருமுறை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இனிவரும் காலங்களில் இந்நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படவுள்ளது |
| (iii) | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை. | குப்பைகள் வகைப்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெரும்பாலும் எம்மால் சேகரிக்கப்படும் கழிவுகள் உக்கக்கூடிய கழிவுகளாகவே அமைவதால் வகைப்படுத்தப்படாமல் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகின்றது. எனினும் தற்போது கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு சேகரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டு வரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று சபையினால் ஏற்படுத்தப்படவில்லை. | குப்பைகளை வகைப்படுத்துவதற்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றுசபையால் ஏற்படுத்தப்படல் வேண்டும். | நாளாந்தம் எம்மால் அகற்றப்படும் கழிவுகள் ஏறத்தாழ 1000 – 1500 கிலோகிராமிற்கு உட்பட்டதாகவும் இதில் 90%ற்குட்பட்டகழிவுகள் உக்கக்கூடிய கழிவுகளாகவே அமைவதாலும் அகற்றப்படும் இடத்தில் வகைப்படுத்தல் செய்யப்படாமல் அகற்றப்பட்டு வருகின்றது என்பதுடன் சபையில் திண்மக்கழிவகற்றல் திட்டத்திற்குபோதிய நிதி பற்றாக்குறையாகவுள்ளது. |
| (v) | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் | கடந்த காலங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த போதும் அண்மைய காலங்களில் வழங்கப்பட்டிருக்கவில்லைஇதனை வழங்குவதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் துறைரீதியாக நடாத்தப்படவுள்ளது. |
| (vi) | கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தரவுகள் மற்றம் தகவல்கள் முறைப்படுத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் தரவு முறைமை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன் |
| (vii) | திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ | திண்மக்கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தபடல் வேண்டும். | திண்மக்கழிவுமுகாமைத்துவம் தொடர்பான பொருத்தமான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு பெரும் |

| | | |
|---|---|---|
| மூட்டி எரிக்கப்படுகின்றது. | | தொகையான நிதி தேவைப்படுவதனாலும் முன்மாதிரியானதேசிய திட்டம் ஒன்று காணப்படாமையினாலும் உள்ளூராட்சி மன்றங்கள் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் அன்றாடம் அகற்றப்படும் குப்பைகளைஅகற்றப்படும் இடத்தில் குறைப்பதற்கு தீமூட்டப்படவேண்டியுள்ளதுஇருப்பினும் இதற்கு மாற்றீடான திட்டமொன்று விரைவில் எடுக்கப்படும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 04 கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா949,000தொகையினை 31 திசெம்பர் 2019 வரை செலுத்தி தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகள் செலுத்தி தீர்க்கப்படல் வேண்டும் | வருட இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கொடுப்பனவாகும். கொடுப்பனவுக்குரியஉறுதிச்சீட்டுகள் கிடைக்காததனால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள்** | | |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 07 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பட்டிருக்கவில்லை. | உரியகாலத்தில் வெற்றிடங்களை நிரப்பபடுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. |

**(ஆ) ஊழியர் பிணைகள்**

| | | |
|---|---|---|
| 03 உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக சபையில் இருந்து விலகிய போதும் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ள ஊழியர் பிணை வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 12,500 இனை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரியகாலத்தினுல் பிணைப்பணங்களை மீளளிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த ஊழியர் பிணைவைப்பு ஓய்வுபெற்றுச் சென்றவேலையில் இருந்து விலகிச் சென்றுள்ள உத்தியோகத்தர்களது கொடுப்பனவுகளாகும் தற்பொழுது மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த 12 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்பொழுது ஆதனவரி அறவிடும் கிராமத்திற்கு மேலாக ஆதன மதிப்பீடு செய்துவற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை மதிப்பீடு செய்து தரப்படவில்லை |
| (ஆ) | சபையினால் 610 கட்டிட அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் 165 தரப்பினர்களுக்கு மாத்திரமே வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது 445 தரப்பினர்களுக்கு வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் கடந்த 07 வருடங்களாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 445 விண்ணப்பதாரர்களது விண்ணப்பப்படிவங்களிலும் சில விண்ணப்பப்படிவங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் சிபார்சு செய்யப்படாமலும் சில விண்ணப்பதாரர்களால் கட்டடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வாழ்வியல் குடிபுகுசான்றிதழ் கோரிவிண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாமலும் உள்ளது. |

3.5 சொத்து முகாமைத்துவம்

3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் 04 வாகனங்கள் பாவனையிற்குட்படுத்துவதற்கு நாளாதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் வாகனங்களை திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | 144-8379வாகனம் பயன்படுத்தக்கூடிய நிலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய 03 வாகனங்களும் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பெயர் மாற்றம் செய்யப்பட்டபின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது |

3.5.2 சுவீகரிக்கப்படாதசொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 61 காணிகளின் உரிமையானது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமையானது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகளுக்கான ஆவணத்தினை வழங்க கோரிஏற்கனவே பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது |
| (ஆ) | நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 08 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையினை மாற்ற சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 08 வாகனங்களும் தற்பொழுது சபையின் பெயருக்கு உரிமைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

3.5.3 குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின்கீழ்விளையாட்டு மைதான நுழைவாயிலில் பெயர்ப்பலகை அமைத்தல் வேலையானது ரூபா 577,095செலவில்09 மார்ச் 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும். மைதான உரிமையானது சபைக்கு உரியதாக | மைதானத்தினை உரிமைமாற்றம் செய்வதுடன் பாவனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஓமந்தை விளையாட்டுமைதான காணி உரிமைமாற்றம் தொடர்பாக தற்பொழுது பிரதேச செயலாளரால் மாகாண காணி ஆணையாளர் வட மாகாணம் அவர்களுக்கு கடிதம் |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாத காரணத்தால் இவ்வறிக்கைத்திகதி வரை மைதானத்தை பாவனையிலீடுபடுத்தபடவில்லை அத்துடன் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக நாளதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | அனுப்பப்பட்டுள்ளதாக பிரதி எமது சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காணி உரிமை மாற்றம் கிடைக்கப் பெற்றதும் மக்கள் பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| (ஆ) | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கோமரசங்குளம் பூங்கா அமைத்தல் தொடர்பில் ரூபா 2,002,345 செலவில் 07 திசெம்பர் 2015 பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடுபடுத்தப்படாமல் உள்ளது | குறித்த பூங்காவை பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோமரசன் குளம் பொதுப்பூங்காவினுள் எமது சபைக்குரிய இலவசஆயுர்வேத வைத்திய சேவை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. தற்பொழுது சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானதிற்கமைவாக மூலிகைத் தோட்டம் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையே பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே ரூபா 01 தொடக்கம் ரூபா 3,077,694வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும் | இனிவரும் காலத்தில் பாதீடு தயாரிக்கும் போது இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படாதவாறு தயாரிக்கப்படும். |